
சிவந்த
சமுத்திரத்தின்
வழியாய்
பாடம் 6 ஆகஸ்ட் 9, 2025


“அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள்
நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப்
பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும்
காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள்
சும்மாயிருப்பீர்கள் என்றான்.” யாத்திராகமம் 14:13, 14

எகிப்திலிருந்து வெளியேறுவது பார்வோனின் முதல் மகனின் மரணத்தையோ அல்லது குறைந்தபட்சம் மரண அச்சுறுத்தலையோ உள்ளடக்கும் என்று தேவன் ஆரம்பத்திலிருந்தே எச்சரிந்திருந்தார் (யாத் 4:22-23).



முதற்பேறானவர்களின் மரணத்தை தவிர்க்கவும், அவர்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்து செல்லவும், தேவன் அவர்களிடம் ஒரு விசுவாச செயலை கேட்டார்: பஸ்கா பண்டிகை. இப்போது, அவர் அவர்களை வேறுவழி இல்லாத பாதைக்கு அழைத்து சென்று கொண்டிருந்தபோது, விசுவாசத்தின் இரண்டாவது படியை எடுக்கவேண்டிய நேரம் இது: முன்னோக்கி செல்வது.

செங்கடலை கடந்த பின்பு, இறுதியாக எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர், தங்கள் விடுதலையாளரைப் புகழ்ந்து பாடினர்.





- எகிப்திலிருந்து யாத்திரை:
  - தயவுசெய்து கிளம்புங்கள்! (யாத் 12:31-36)
  - முதற்பேறானவர்களின் பிரதிஷ்டை (யாத் 13:1-16)
- செங்கடலை கடந்துசெல்லுதல்:
  - வனாந்தரத்தில் சிக்கிக்கொண்டார்கள் (யாத் 13:17-14:12)
  - கடலில் ஒரு பாதை (யாத் 14:13-31)
- கொண்டாட்டம்:
  - மோசேயின் பாட்டு (யாத் 15:1-21)

# எகிப்தில் இருந்து யாத்திரை







# தயவுசெய்து கிளம்புங்கள்!


"எகிப்தியர்: நாங்கள் எல்லாரும் சாகிறோமே என்று சொல்லித், தீவிரமாய் ஜனங்களைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை மிகவும் துரிதப்படுத்தினார்கள்." (யாத் 12:33)

எகிப்து முழுவதும் பாழடைந்தது, "சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை." (யாத். 12:30). இஸ்ரவேலர் வெளியேற பார்வோனின் அனுமதி மிகவும் தாமதமாக வந்தது. "என்னையும் ஆசீர்வதியுங்கள்" (யாத். 12:32) என்ற சொற்றொருடன், பார்வோன் தனது மக்கள் அனைவரின் உணர்வுகளையும் வெளிப்படுத்தினார்: தயவுசெய்து எங்களுக்கு வேறு எதுவும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

அது தனது தவறுக்கான உண்மையான வருத்தத்தின் வெளிப்பாடல்ல, மாறாக பேரழிவை நிறுத்த வேண்டும் என்ற விருப்பமாகும்.




இஸ்ரவேலர்கள் தங்கள் பல வருட சேவைக்கான கூலியை கேட்டபோது, எகிப்தியர்கள் "கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார்கள்" (யாத். 12:36). இந்த வழியில், தேவன் தம்முடைய முதற்பேறானவர்கள் எகிப்திலிருந்து வெளியேறுவதை உறுதி செய்தார் - மேலும் அவர் கைகளை நிரப்பினார்.



# முதற்பேறானவர்களின் பிரதிஷ்டை

"இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது என்றார்." (யாத் 13:2)

**முதற்பேறானவர்கள் எவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்?**



அவர்கள் மரணத்தால் புனிதப்படுத்தப்பட்டனர். ஒவ்வொரு முதற்பேறான மகனும் இறக்க வேண்டும். ஆனால் முதற்பேறான மகனுக்கு பதிலாக வேறொருவர் இறக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

உறவை கவனியுங்கள்: இஸ்ரவேல் தேவனுடைய முதற்பேறானது (யாத். 4:22); இன்றைய திருச்சபை ஆன்மீக இஸ்ரவேல் (கலா. 6:16); எனவே, நாம் அனைவரும் தேவனுக்கு அற்ப்பணிக்கப்படுவதற்கு இறக்க வேண்டும்; ஆனால் நம் இடத்தில் இறந்த ஒருவர் இருக்கிறார்.





இயேசு, "தேவாட்டுக்குட்டி" (யோ. 1:29), தம்முடைய இரத்தத்தை தங்கள் இருதய வாசலில் பூசுகிற எவரும் மரிக்காமல் நித்திய ஜீவனைப் பெறும்படி மரித்தார்.

தேவன் ஏற்கனவே தம்முடைய பங்கை செய்துவிட்டார். அவருடைய மீட்பின் இரத்தத்தால் நம்மை மூடிக்கொள்ள அனுமதிப்பது நம் பொறுப்பு.

# செங்கடலை கடந்துசெல்லுதல்



# வனாந்தரத்தில் சிக்கிகொண்டார்கள்

"அப்பொழுது பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்து: அவர்கள் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள்; வனாந்தரம் அவர்களை அடைத்துப்போட்டது என்று சொல்லுவான்." (யாத் 14:3)

பார்வோனின் அனுமதியுடன், இஸ்ரவேலர்கள் "அணியணியாய்ப் புறப்பட்டுப்போனார்கள்" (யாத். 13:18). ஆனால் அவர்கள் போரை எதிர்கொள்ள தேவன் விரும்பவில்லை, அதனால் அவர் அவர்களை சுற்றி வழிநடத்தினார் (யாத். 13:17).



இதற்கிடையில், பார்வோன் மனந்திரும்பி இஸ்ரவேலை துரத்தி விட்டதற்காக வருத்தப்பட்டான் (யாத். 14:5). இஸ்ரவேல் இப்போது வனாந்தரத்தில் சிக்கி கொண்டது, தப்பிக்க வழி இல்லாமல் இருந்தது (யாத். 14:2-3, 9).




"அவர் செய்த அதிசயங்களை ... நினைவுகூருங்கள்" (1 நாளா. 16:12)

விசுவாசத்தின் செயலாக, அவர்கள் யோசேப்பின் சவப்பெட்டியை அவர்களுடன் எடுத்து சென்றனர் (யாத். 13:19). மேலும், தேவன் அவர்களை அற்புதமாக வழிநடத்திக் கொண்டிருந்தார் (யாத். 13:21).



இருப்பினும், பார்வோனின் படையை பார்த்ததும், அவர்களின் நம்பிக்கை முற்றிலுமாக சரிந்தது. (யாத். 14:10-12). தாங்கள் அனுபவித்த அற்புதங்களை எவ்வளவு விரைவாக மறந்துவிட்டார்கள்! இது நமக்கும் நடக்குமா?






# கடலில் ஒரு பாதை

"அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்." (யாத் 14:13-14)

மக்களின் விசுவாச குறைபாட்டை எதிர்கொண்டு, மோசே அவர்களை தேவன் மீது நம்பிக்கை வைக்க ஊக்குவித்தார் (யாத். 14:13-14):

| | |
|---|---|
| "பயப்படாதிருங்கள்" | வெற்றி அடைவதற்கான முதல் படி தேவன் மீது நம்பிக்கை வைப்பது தான் |
| "நின்று கொண்டு" | நாம் முணுமுணுக்காமல், பொறுமையோடு நமது இடத்தில் இருக்க வேண்டும். |
| "இரட்சிப்பை பாருங்கள்" | தேவன் நம்மை வழிநடத்த அனுமதித்தால் வெற்றி நிச்சயம். |
| "யேகோவா உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்" | தேவன் நமக்காக சாத்தானுக்கும் பாவத்திற்கும் எதிராக போராடுகிறார். கல்வாரி இதற்கு மிகப் பெரிய சான்றாகும். |



# கடலில் ஒரு பாதை

**தேவன் ஒரேயொரு கட்டளையை ஜனங்களுக்கு கொடுத்தார்: “புறப்பட்டுப் போங்கள்” (யாத்திராகமம் 14:15). அத்தருணத்திலிருந்து, எதர்பாராதவைகள் நடந்தன (யாத்திராகமம் 14:19-31):**



இஸ்ரவேல் ஜனங்களின் முகாமிற்கும் எகிப்தியர்களின் முகாமிற்கும் இடையில் தேவனுடைய தூதனும் மேகஸ்தம்பமும் நின்றது



இரவில், அந்த தூண் எகிப்தியர்களுக்கு இருளாகவும் இஸ்ரவேலர்களுக்கு வெளிச்சமாகவும் இருந்தது




மோசே தன் கோலை உயர்த்தினான், கடல் இரண்டாக பிளந்தது, அதனால் இஸ்ரவேலர் வறண்ட நிலத்தில் நடந்து சென்றார்கள்.



இஸ்ரவேலர் கடலுக்குள் நுழைந்தார்கள், தண்ணீர்கள் அவர்கள் வலது மற்றும் இடது பக்கங்களில் சுவர்களாக நின்றது



எகிப்தியர்களும் கடலுக்குள் நுழைந்தார்கள்



விடியற்காலையில், எகிப்தியர்களை தேவன் கலங்கடித்தார்



அவர்கள் பின்வாங்க முயன்றபோது, கடல் அதன் பாதைக்கு திரும்பி, முழு இராணுவத்தையும் அழித்தது.



கடற்கரையிலிந்து, இஸ்ரவேலர் வெற்றியை கண்டார்கள், அவர்கள் தேவனையும் மோசேயையும் நம்பினார்கள்

# கொண்டாட்டம்







# மோசேயின் பாட்டு



"அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்." (வெளிப்படுத்தல் 15:3)

நடந்ததைக் கண்டு, மோசே இஸ்ரவேலரோடு தேவனை புகழ்ந்து பாடுகிறார், மிரியாமும் பெண்களோடு சேர்ந்து ஒரு பாடகர் குழுவுடன் பதிலளிக்கிறார் (யாத். 15:1, 20-21).



இந்த பாடலில், இஸ்ரவேல் என்ன செய்தது என்பது பற்றி எதுவும் குறிப்பிடபடவில்லை. இந்த பாடல் எதிரியை அழித்ததற்காக தேவனை புகழ்வதோடு மட்டுமல்லாமல் (யாத். 15:6), அவருடைய கிரியைகளுக்காகவும் பாடப்பட்டது (யாத். 15:11). என்ன நடந்தது என்று கேட்பவர்களின் எதிர்வினை அறிவிக்கப்படுகிறது (யாத். 15:14).



மேலும், தேவன் இன்னும் என்ன செய்யப் போகிறார் என்பதும் அறிவிக்கப்பட்டது: "நீர் அவர்களைக் கொண்டுபோய், கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்கு நியமித்த ஸ்தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ..அவர்களை நாட்டுவீர்." (யாத். 15:17).

தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வெளிப்பட்டு, தீமையும் ஒடுக்குதலும் ஒழிக்கப்பட்டிருக்கும் போது, தேசங்களிலிருந்து மீட்கப்பட்டவர்கள் அந்த நீதியான நியாயத்தீர்ப்புகளுக்காக அவரை புகழ்ந்து, மோசேயின் பாடலையும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலையும் பாடுவார்கள் (வெளி. 15:3).